# திருவண்ணாமலை



திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயிலில் பிரதோஷத்தை முன்னிட்டு, பெரிய நந்திக்கு சிறப்பு பாலாபிஷேகம், சந்தன அபிஷேகம், விபூதி அபிஷேகம் நடந்தது.

## தி,மலை கோயிலில் தேய்பிறை பிரதோஷம்

■ திருவண்ணாமலை, அக்.9-

புரட்டாசி மாத தேய்பிறை பிரதோஷத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை அருணாசலேசுவரர் கோயில் ராஜகோபுரம் அடுத்த பெரியநந்தி உட்பட எல்லா நந்திகளுக்கும் அபிஷேக ஆராதனைகள் நடந்தது.

மேலும், அஷ்டலிங்க கோயில்கள், அடிஅண்ணாமலை ஆதிஅருணாசலேசுவரர் கோயிலிலும் பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம் தி.மலையில் அக்.23ல் நடக்கிறது

■ திருவண்ணாமலை, அக்.9-

திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அக்டோபர் மாதத்துக்கான மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 23ம் தேதி (வெள்ளிக்கிழமை) காலை 10.30 மணியளவில் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் கலெக்டர் வந்தனா கார்க் தலைமையில் நடக்கவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள வேளாண் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகம், கால்நடை பராமரிப்பு துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த்துறை மற்றும் சார்பு துறைகள் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர். விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் தங்கள் பொது கோரிக்கைகளை கூட்டத்தில் தெரிவித்தும், தனிநபர் குறைகளை மனுக்களாக கொடுத்தும் பயன்பெறலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அபாயம்

• மழையில் விழுந்த அரசுப்பள்ளி சுற்றுச்சுவர்
• கல்வித்துறை நடவடிக்கை எடுக்க கோரிக்கை

■ செங்கம், அக்.9-

செங்கம் அடுத்த மேல்பள்ளிப்பட்டு பகுதியில், அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி உள்ளது. இந்தப் பள்ளியில் மேல்புழுதியூர், அம்பேத்கர் நகர், பக்கிரபாளையம், அந்தனூார், மேல்பள்ளிப்பட்டு, பாண்டியன் நகர் பகுதிகளில் இருந்து 6ம் வகுப்பு முதல் பிளஸ் 2 வரை 300க்கும் அதிகமான மாணவிகள் படித்து வருகின்றனர். இப்பள்ளி, செங்கம் பகுதியில் 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வுகளில் முதன்மை இடத்தில் உள்ளது.



செங்கம் அடுத்த மேல்பள்ளிப்பட்டு அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி சுற்றுச்சுவர் விழுந்து, தற்காலிகமாக முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த சில நாட்களாக பெய்த மழையில் பள்ளியின் பின்பக்கம் உள்ள சுற்றுச்சுவர் விழுந்து, பள்ளி வளாகம் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளது. இதனால், பள்ளி நேரம் முடிந்து பள்ளி வளாகத்துக்குள் யார் வருகிறார்கள் என்பது தெரிவதில்லை. சில நேரங்களில் அந்த வழியாக மாடுகள் பள்ளி வளாகத்துக்குள் வருகிறது. மேலும், பள்ளியின் பின்புறம் குடியிருப்புகள் இல்லை. அடர்ந்த முட்புதர்கள் தான் உள்ளது. இதனால், மழைக் காலத்தில் விஷப்பூச்சிகள் பள்ளி வகுப்பறைக்கு வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளது.

அதற்கு மேலாக, இரவு நேரத்தில் அப்பகுதி சமூக விரோதிகளின் நடமாட்டம் உள்ளதாக மக்கள் தகவல் தெரிவிக்கின்றனர். இதனால், பள்ளி வளாகத்துக்குள் மாடுகள் உள்ளே வராமல் இருக்க, தற்காலிகமாக முள்வேலி அமைக்கப்பட்டுள்ளது.

எனவே, இது தொடர்பாக மாவட்ட கல்வி நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுத்து, மேல்பள்ளிப்பட்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி வளாகத்தை சுற்றி சுற்றுச்சுவரை கட்ட, நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## அறிவியல் மன்ற தொடக்க விழா

■ கண்ணமங்கலம், அக்.9-

காளசமுத்திரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் அறிவியல் மன்ற தொடக்க விழா நடந்தது. தலைமை ஆசிரியர் அருளரசு தலைமை வகிக்க, அறிவியல் ஆசிரியர் திருஞான சம்பந்தம் வரவேற்றார்.

மாணவ, மாணவிகள் பங்கேற்று, மூலக்கூறு வாய்ப்பாடு, கனிமங்கள், சேர்மங்கள், உலோகம், தாவர செல்கள், இதய இயக்கம் தொடர்பான பட்டிமன்றம், வில்லுப் பாட்டு நிகழ்ச்சிகளை நடத்தினர்.

**ENROLMENT NOTICE**

After ten days of the publication of this Notice and within three months thereafter,

I, **ASWINKUMAR.K,** S/o. S.Krishnakumar, Permanently residing at Door No.60/41, Old Karkana Street, Tiruvannamalai district, Tamil Nadu - 606 601. Intend having my Enrolment as an Advocate moved before the Bar Council of Tamilnadu, Bar Council Buildings, High Court Campus, Chennai -104. Those who have any valid objections may, notify the same to the Bar Council within 10 days.

**ASWINKUMAR.K**

Bank of Baroda

**சன்னதி தெரு திருவண்ணாமலை கிளை**
நெ47, சன்னதி தெரு, திருவண்ணாமலை - 606601.
போன்: 04175-253344. Email: vjthti@bankofbaroda.bank.in

(baanknet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செய்தித்தாள்களில் வெளியிடப்படும் சுருக்கமான விற்பனை அறிவிப்பு)

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

**பிற்சேர்க்கை IV-Aயின்படி ( விதி 6(2) மற்றும் 8(6)யை பார்க்கவும்)**
**2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.**

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கி**யின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **''எங்கு உள்ளதோ அப்படியே'' ''எப்படி உள்ளதோ அப்படியே'' மற்றும் '' என்ன இருக்கிறதோ அதே நிலையில்''** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகரிப்பு தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1. திரு. செல்வகுமார், த/பெ. சிவலிங்கம், நெ.22, நடுத் தெரு, வீரையூர், திருவண்ணாமலை - 606806.
2.திரு.ராஜசேகர், த/பெ. சிவலிங்கம், நெ.27, நடுத் தெரு, வீரையூர், திருவண்ணாமலை - 606806.

Loan A/c.No.**69690600001197,** நிலுவை தொகை ரூ.**13,75,865.13/-** மேலும் **04.10.2026** அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.
04.10.2026 அன்று மொத்த நிலுவை தொகை ரூ. **13,75,865.13/-**

**அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் வில்லங்கங்கள் இருப்பின்**

திருவண்ணாமலை பதிவு மாவட்டம், திருவண்ணாமலை இணை II சார்பதிவு, வீரையூர் கிராமம் நத்தம் பட்டா எண். 51, சர்வே நெ. 128/1. பழைய சர்வே நெ. 46/9 உட்பிரிவுக்கு பிறகு 128/1B, மற்றும் புதிய பட்டா நெ. 195, இதில் கிழக்கு மேற்காக 23½ அடி. வடக்கு மற்றும் தெற்காக 27 ½ அடி. தெற்கு வடக்காக 45 அடி. ஆக மொத்தம் 1147½ சதுரஅடி. 1000 சதுரடியில் கட்டப்பட்ட ஆர்.சி.சி. வீடு உட்பட. **நான்கு எல்லை:** நடுத் தெருவிற்கு தெற்கு, திரு. சுரேஷ் அவர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட சொத்திற்கு வடக்கு. திரு. ராஜசேகர் அவர்களுக்கு தானமாக வழங்கப்பட்ட சொத்திற்கு கிழக்கு, திரு.ராமலிங்கம் வீட்டிற்கு மேற்கு. **சுவாதின நிலை:** ஆக்கப்பூர்வமான

| நிர்ணயிக்கப்பட்ட விலை | ரூ. 15,60,000/- | டேவணித் தொகை | ரூ. 1,56,000/- | ஏல உயர்வு தொகை | ரூ. 25,000/- |
|---|---|---|---|---|---|

**மின் ஏல தேதி மற்றும் நேரம் 17.11.2026** அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

**சொத்தினை பார்வையிடும் தேதி : 23.10.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)**
**டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 17.11.2026**

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.bank.in/e-auction** மற்றும் **BAANKNET.COM** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருகைதரவும். மேலும் ஏலதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கிகரிக்கப்பட்ட அதிகாரி செல்: 9677075502 & 9515024578 தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 08.10.2026
இடம் : சன்னதி தெரு, திருவண்ணாமலை

**அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/ பேங்க் ஆஃப் பரோடா**



விஷம் கலந்த கோழி இறைச்சி சாப்பிட்டு இறந்த நாயை அப்புறப்படுத்திய மக்கள். (அடுத்த படம்) விஷம் கலந்த கோழி இறைச்சியை அப்புறப்படுத்தும் போலீசார்.

## விஷம் கலந்த கோழிக்கறி சாப்பிட்டு 3 நாய்கள் பலி

### திருடர்கள் கைவரிசையா?

■ திருவண்ணாமலை/ கீழ்பென்னாத்துார், அக்.9-

திருவண்ணாமலை அருகே திண்டிவனம் சாலையில் உள்ள தனலட்சுமி நகர் அமைந்துள்ளது. இங்கு சில நாட்களுக்கு முன்னர், மர்ம நபர்கள் 4 வீடுகளில் பூட்டை உடைத்து 20 பவுன் நகைகளை திருடிச்சென்றனர். அதே பகுதியில், மேலும் 2 வீடுகளில் கொள்ளையர்கள் பணத்தை திருடிச் சென்றனர். இது குறித்து கீழ்பென்னாத்துார் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், திருட்டு நடந்த தனலட்சுமி நகரில், நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்கள் விஷம் தடவிய கோழி இறைச்சியை ஆங்காங்கே வைத்து சென்றுள்ளனர். இதனை சாப்பிட்ட அப்பகுதியில் இருந்த 3 நாய்கள் இறந்தன. இதனை கண்ட மக்கள் அதிர்ச்சியடைந்தனர். வீடுகளில் திருடுவதற்கு இடையூறாக உள்ள தெரு நாய்களுக்கு விஷம் கலந்த கோழி இறைச்சி வைத்திருக்கலாம் என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டுகின்றனர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு நிலவி வருகிறது.



விஷம் கலந்த கோழி இறைச்சி.

விஷம் தடவிய கோழி கறி சாப்பிட்டு நாய்கள் பலியான தகவல் அறிந்த கீழ்பென்னாத்துார் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து பார்வையிட்டு, அங்கு வைக்கப்பட்டிருந்த விஷம் கலந்த கோழிக் கறியை பறிமுதல் செய்தனர். இது திருட வந்தவர்களின் கைவரிசையா? என விசாரணை நடத்தி வருகின்றனர்.

## சிறார் திருமணம் நிகழாமல் கண்காணிக்க வேண்டும்

### சப் கலெக்டர் எச்சரிக்கை

■ செய்யாறு, அக்.9-

செய்யாறு மாவட்ட சுகாதார துறை சார்பில் பைங்கிணர் அவுசிங் போர்டு தொடக்கப்பள்ளியில் நேற்று மாலை நடந்த ஒருங்கிணைந்த ஆலோசனை கூட்டத்துக்கு சப் கலெக்டர் அம்பிகா ஜெயின் தலைமை வகித்தார். மாவட்ட சுகாதார அதிகாரி டாக்டர் பானுமதி முன்னிலை வகித்தார். வட்டார மருத்துவ அதிகாரி டாக்டர் ஷர்மிளா வரவேற்றார்.

கூட்டத்தில் சுகாதாரத் துறை ஊழியர்கள் கூறுகையில், ''பழங்குடியினர், குருவிக்காரர்கள், கல் உடைப்போர், பூம்பூம் மாட்டுக்காரர்கள் போன்றோர் தினமும் பகலில் வேலைகளுக்கு வெளியூர் சென்று விடுகின்றனர். அவர்களின் குடியிருப்புகளுக்கே சென்று போலியோ சொட்டு மருந்து மற்றும் தடுப்பூசி போட முயற்சித்தாலும், அரசு மருத்துவமனைகளில் பிரசவம் பார்த்துக்கொள்ள வலியுறுத்தினாலும் மறுத்து வருகின்றனர்.

இவ்வாறு மக்கள் வாழும், நெடும்பிறை, குன்னத்துார், வடபூண்டிப்பட்டு, திருவோத்துார், ஆற்றங்கரை போன்ற பகுதி மக்களுக்கு ஆதார் உள்ளிட்ட சான்றிதழ் கிடைக்கச் செய்ய வேண்டும். இதற்காக சிறப்பு முகாம் ஏற்பாடு செய்வது குறித்து பரிசீலிக்க வேண்டும்'' என்றனர். பின்னர், சப் கலெக்டர் அம்பிகா ஜெயின் பேசியதாவது: கிராமப்புறங்களில் கடந்த ஆண்டு 73 பேர் பள்ளிப் படிப்புகளை பாதியில் நிறுத்தி வீட்டிலேயே உள்ளனர். அவர்களை கணக்கெடுத்து அறிவுரை வழங்க வேண்டும். அவ்வாறு இருப்பவர்களில் சிறார் திருமணம் மற்றும் டீன் ஏஜ் கர்ப்பம் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

சுகாதாரத்துறைக்கு மட்டுமே பொறுப்புள்ளது என ஒதுங்கிவிடாமல் கல்வித்துறை, வருவாய்த் துறை, போலீசார் என எல்லா துறைகளும் அவற்றை கண்காணித்து இவை நிகழாமல் தடுத்து அப்பகுதியினருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, அறிவுறுத்த வேண்டும்.

பெண்கள் பள்ளிகளுக்கு சென்று பிளஸ் 2 வயது வரையான மாணவிகளுக்கு பள்ளி வயதில் காதல் மற்றும் டீன் ஏஜ் கர்ப்பம் மிகவும் ஆபத்தானது என்பதை உணர்த்த வேண்டும். மேலும், கர்ப்பப்பை வாய் புற்றுநோய் தடுப்புமுறைகளையும் எடுத்துக் கூறவேண்டும். இவ்வாறு பேசினார்.

இதில் 8 வட்டாரங்களின் மருத்துவ அதிகாரிகள், கிராமப்புற செவிலியர்கள், வட்டார வளமைய அலுவலர்கள் சமூக நலத் துறை மற்றும் அரசு மாணவ, மாணவியர் நலத் துறை விடுதி காப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

மூன்றாம் ஆண்டு நினைவு
அஞ்சலி



மறைவு - 09.10.2023
திரு. அ.இராசேந்திரன் B.A.,B.L., Ex.MLA.,
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர், போளூர் சட்டமன்ற தொகுதி

என்றும் உங்கள் நினைவில்...
R.மகேஷ், Dr.ராகினிஆனந்த், R.கவிதாகுமார்
க.சுப்பிரமணியன் B.A.,B.L.,
மூத்த வழக்கறிஞர்
மற்றும் AR அலுவலக அனைத்து இளம் வழக்கறிஞர்கள்
நெ.21/5, பஜார் வீதி, போளூர். செல்: 9443963170

குறிப்பு: இன்று மாலை 6.00 மணிக்கு போளூர் கலைஞர் சிலை அருகில் அன்னதானம் வழங்கப்படும்.